# பாராளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரை

இன்று நான் எனது கன்னி உரையை ஆற்றுகிறேன். நான் வியப்பார்வத்துடனும் பணிவுடனும் இந்த உரையை ஆற்றுகிறேன். இப்பாராளுமன்றத்தில் இலங்கைவாழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இத்தகைய வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் நான் நன்றி செலுத்த விரும்புகிறேன்.

பொருளாதாரத்தைப் பற்றி இங்கு உரையாற்றும்படி நான் கேட்கப்பட்டேன். இன்று காலை எனது தேர்தல் தொகுதியான கொழும்பு கிழக்கின் மத்தியில் அமைந்துள்ள எனது வீட்டிலிருந்து நான் புறப்படும்பொழுது, கடந்த மூன்று நாட்களாக இச்சபையில் நான் மிகுந்த ஆர்வத்துடனும் சிலவேளைகளில் மனக்குழப்பத்துடனும் கேட்டவற்றை, செவிமடுத்தவற்றை நினைத்துப் பார்த்தேன்.

இங்கு நான் வந்து சேர்ந்ததும் எனது பயண வழியை மீள நோக்கினேன். கிருலப்பனையிலுள்ள சேரிகளை நான் கடந்து வந்துள்ளேன். கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக அந்த சேரிகள் ஏறத்தாழ அதேநிலையில் இருப்பதை நான் புரிந்துகொள்கிறேன். எனது குளிரூட்டப்பட்ட காரிலிருந்து எனது தேர்தல் தொகுதி எதிர்நோக்கிய பிரச்சினையான வேலையில்லாப் பிரச்சினையை என்னால் காண முடிகிறது. தமது வாழ்நாளில் ஒரு பொழுதுமே எந்தவொரு தொழிலிலும் ஈடுபடாத முப்பது வயது நிரம்பிய இளைஞர்கள் இந்தச் சேரியில் வசிக்கின்றனர். இப்பிரதேசத்தில் போதைப் பொருள் பாவனையும் மதுபானப் பாவனையும் ஊடுருவியுள்ளன. ஒரு சிறிய மழைக்கும், சாக்கடைக் கான்கள் நிரம்பி வழிந்து, பிள்ளைகள் குளித்து, விளையாடி, குடிக்கும் கிணற்று நீரினுள் கலந்துவிடும். அடுத்ததாக, இலங்கையிலுள்ள சகல வீதிகளைப் போலவே, குழிகள் நிறைந்த வீதிகளில், தம்மை பள்ளிக்கு அழைத்துச் செல்லும் மாயத்தோற்றமான பஸ் வரும் வரை பிள்ளைகள் தமது வெள்ளைச் சீருடையில் ஐயத்துடன் காத்துக்கொண்டிருப்பதை என்னால் காண முடிகிறது. அவர்கள் செல்லும் பாடசாலை பிள்ளைகளுக்கு ஒரேயொரு நிச்சயத் தன்மையை வழங்கும் ஒரு கல்வி முறைமையின் அங்கமாகும். அதாவது இந்த முறையினூடாக வரும் எவருக்கும் வேலை ஒன்று கிடைக்காமையை உறுதி செய்யும் நிச்சயத் தன்மையே அதுவாகும்.

அதன்பின் நான் குப்பை கூளங்கள் சேகரிக்கப்படும் இடம், மாசடைந்த கான்கள், கடை வரிசை என்பவற்றை நான் கடந்து வரும்போது ஒரு கடையின் முன் தாயும் மகளும் போன்ற இரண்டு பெண்கள், கடைக்காரருடன் வாதாடிக் கொண்டிருந்ததைக் கண்டேன். அநேகமாக தமது நாளாந்த தேவைக்குரிய அரிசி, பாண், அல்லது வேறு அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைப் பற்றியதாக அவ்வாதம் அமைந்திருக்கலாம். அதன் பின்பு கனத்தை மயானத் திருப்பத்தை நான் அடைந்தேன். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் வளர்ச்சி பெற்ற கைத்தொழிற்துறையான, மரண இறுதிச் சடங்குகளை நிறைவேற்றும் நிலையங்கள் மயானத்திற்கு முன்பு அமைந்திருந்தன. அங்கு இரண்டு, மூன்று மரணச் சடங்குகள் நடைபெறுவதை என்னால் காணமுடிந்தது. அதில் ஒன்றாவது, நிச்சயமாக, தான் ஈடுபட்ட யுத்தத்தின் நோக்கம் எதுவெனவே தெரியாமல் யுத்த களத்தில் உயிர் நீத்த ஒரு இளைஞருடையதாக இருக்கலாம்.

பின்னர் எனது கார் வீதிச் சமிக்ஞை விளக்குகளுக்காகத் தரித்த பொழுது ஒரு சிறு பிச்சைக்காரப் பையன் தனது தேவையைக் கருதி சிறிது பணத்தைக்கோரி எனது காரின் ஜன்னலைத் தட்டினான். அதன் பின்பு நான் பாராளுமன்றத்தை நோக்கி வருகையில் நான் சார்ந்திருக்கும் ''மறுபாதியில்'' ஒரு காட்சியைக் கண்டேன். சற்றுமுன்னர் தான் திறக்கப்பட்ட மெக்டொனால்ஸ்சைக் கண்டேன். இங்கு ஒரு சாப்பாட்டிற்கு நாம் கொடுக்கும் பணம் சிலருக்கு இரண்டு, மூன்று நாட்செலவுக்குப் போதுமானதாக இருக்கும். அதன் பின்பு நான் பாராளுமன்றத்தை நெருங்குகையில், இந்த ஆவணி அவை அமர்வுகளுக்கென நாம் யாவருமே மகிழ்ச்சியுடன் பயணம் மேற்கொண்டு வந்துசேர்ந்த சொகுசுக் கார்களின் வரிசையைக் கடந்து வந்தேன். நான் எனது இந்தப் பயணத்தினூடாக நாம் யாரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறுகின்றோமோ அவர்களுக்கு என்ன கூறுவது என என்னையே நான் கேட்டுக்கொண்டேன். அவர்களது இக்கட்டான நிலைகுறித்து நான் எவ்வாறு விளக்கலாம். இறுதியாக நாம் அனைவரும் அவர்களுக்கே பதில் சொல்லியாகவேண்டும்.

நான் பணவீக்கத்தின், பெறுமான இறக்கத்தின், துண்டு விழும் தொகையின், வெளிநாட்டு ஒதுக்கீடுகளின், பொருளாதார புள்ளி விபரவியலைப் பற்றி உரையாற்றவா? நான் எவ்வாறு சிறப்பாக ஒவ்வொரு புள்ளி விபரங்களையும் தயாரிக்கிறேனோ அதேபோல மறுபக்கத்தில் உள்ள கௌரவ உறுப்பினர்களும் அதற்குச் சமமாக அங்கீகரிக்கப்படக்கூடிய புள்ளிவிபரங்களைத் தயாரிக்க முடியும் என நான் நம்புகிறேன். அல்லது நான் சுதந்திர சந்தைகளின் அல்லது உலக எண்ணெய் விலைகளின் பொருளியல் கோட்பாட்டைப் பற்றி உரையாற்றவா? இதனை நான் இந்த பாராளுமன்றத்திற்கு வரும் வழியில் சந்தித்தவர்கள் புரிந்துகொள்வார்களா? அவர்கள் அவற்றைப் பொருட்படுத்துவார்களா? அல்லது அவர்களுக்கு இது தேவையா? பிரபல ஜேர்மனியக் கவிஞர்களில் ஒருவரான ''கோத்'', தனது ஆவியை பிசாசிற்கு விற்கும் மனிதனைப்பற்றி எழுதிய போற்றுதற்குரிய 'பவுஸ்ட்' (Faust) என்ற ஆக்கத்திலிருந்து ஒரு பகுதியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர் கூறுகிறார், "எனது நண்பனே! கோட்பாடுகள் சாம்பல் நிறமானவை, நிலைபேறுடைய வாழ்வு பச்சை நிறமானது." உண்மையிலேயே அவர் ஒரு ஐக்கிய தேசியக் கட்சியாளர் அல்லர். அவர் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். 'பச்சை' என்று அவர் குறிப்பிடுவது வாழ்க்கையின் நிறத்தையே. இச்சபையில் நாம் எதையும் கோட்பாடுகளின் அடிப்படையில் பேசுகிறோம். ஆனால் வாழ்க்கை பச்சையானது.

நான் இந்த மக்களிடையே உலகமயமாக்கலின், புதிய பொருளாதாரத்தைப் பற்றி அல்லது புதிய தொழில்நுட்பத்தைப் பற்றி உரையாற்றவா? இன்று எவ்வாறு மனித வளங்கள் உள்ளன, அந்த மனித வளங்கள் எவ்வாறு அபிவிருத்தி அடைகின்றன, அல்லது இயற்கை வளங்கள் என்பவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறவா? அல்லது நாம் தவறவிட்ட வாய்ப்புக்களைப் பற்றிக்கூறவா? 1950களில் இலங்கை, சிங்கப்பூராக மாற இருந்த ஆற்றலையும் சிங்கப்பூர் இலங்கையை எவ்வாறு முந்திக் கொண்டது என்பதையும் கூறவா? அல்லது எமக்குப் பதிலாக 1990களில் இந்திய உபகண்டத்தின் நுழைவாயிலாக எவ்வாறு துபாய் மாறியது எனக் கூறவா? அல்லது இன்று நாம் பேசினாலும் வாதிட்டாலும் சண்டையிட்டாலும் கோஷமெழுப்பினாலும் 21ம் நூற்றாண்டில் கைத்தொழல் துறையில் அதிஉன்னத வளர்ச்சியைக் காட்டக்கூடிய இந்தப் பிராந்தியத்தின் நுழைவாயிலாக, இந்தப் பிராந்தியத்தின் கொங்கொங்காக மாறக்கூடிய தகைமை இன்னும் எமக்கு உள்ளது என்பதைப் பற்றிப் பேசவா?

நான் நியாயமானதெனக் கருதுகின்றதும் உதவி வழங்கும் நாடுகளின் கலந்துரையாடல்களுக்கு அடிப்படையாக விளங்கவுள்ளதுமான உலக வங்கியின் மிக அண்மைக்கால அறிக்கையில், இவ்வாண்டுக்கான அறிக்கைக்கு மிகப் பொருத்தமான ‘‘இலங்கை - இழந்த வாய்ப்புக்களை மீண்டும் கைப்பற்றுதல்.’’ என்ற தலைப்பிட்டுள்ளது. எமது இத்தகைய கல்வி முறையை வகுத்தவர்களிடம் அத்தகைய கல்வி முறையால் தொழிலற்ற இரு தலைமுறைகளைப் பற்றியும் இந்த உலகப் பொருளாதாரத்திற்குப் பொருந்தாத அவர்கள் நிலை பற்றியும் உலகப் பொருளாதார மொழியை பேச முடியாதுள்ளமை பற்றியும் நான் பேசவா? இந்த கல்வி முறையை முகாமைத்துவம் செய்வோர் அல்லது இந்த நாட்டை ஆட்சி செய்வோர் எவரும் தமது சொந்தப் பிள்ளைகளையே அனுப்பத் தயங்கும் அந்தக் கல்வி முறை பற்றி நான் பேசவா?

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக வெறுப்புணர்வு, மனக்கசப்பு என்பவையால் உருவான வெறுப்பும், விரோதங்களும், ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டும் தன்மையும் நிறைந்த, ஆக்கபூர்வமான விமர்சனங்கள் என்பது தனிப்பட்டதாகவும் தாக்குதல் நிறைந்ததாகவம் மாறியுள்ள இந்த அரசியலைப் பற்றிப் பேசவா? எனது குறுகிய அரசியல் வாழ்க்கை பயணத்திற்குள் நான் வெறுப்பைப் பற்றி சிந்தித்துப் பார்த்த வேளைகளிலெல்லாம், இந்த அமைப்பு மாறவேண்டும் எனவும் மனக்கசப்பு உடைக்கப்பட வேண்டும் எனவும் கூறக்கூடிய, மன உறுதியும் இரக்க சிந்தையும் கொண்டவருமான நெல்சன் மண்டேலாவே என் நினைவிற்கு வருவார்.

அல்லது நான், ஜனநாயக முறைபற்றி அதாவது கடந்த 50 வருடங்களுக்கு மேலாக, ஜனநாயக நிறுவனங்கள் எவ்வாறு படிப்படியாக அழித்து நிர்மூலமாக்கப்பட்டன என்றோ, அரசியல்வாதிகள் எவ்வாறு அரைத் தெய்வங்களாக மாறினார்கள் என்றோ, தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களிடமிருந்து ஒதுங்கி இவர்கள் பாதுகாப்பாக வாழ்கிறார்கள் என்றோ இந்த மக்களிடம் பேசவா? அநேகமான சந்தர்ப்பங்களில் வெட்கமே இன்றி எமக்கு நாமே சேவையாற்றுவதற்காகவே பதவியில் உள்ளோம். அல்லது சந்தர்ப்பவாதம் பற்றி நான் பேசவா? 1970களில் சிங்கப்பூர் நாட்டின் அப்போதைய பிரதம மந்திரி லீ குவான் யூ இலங்கைக்கு விஜயம் செய்து சில நாட்களைக் கழித்தார். அவர் இலங்கையிலிருந்து திரும்பிச் செல்லும்போது அப்போதைய ஜனாதிபதி திரு. ஜயவர்தனவிடம், ‘‘இல்லாத வளங்களின் சுழற்சியான ஏல விற்பனையே உங்கள் ஜனநாயகம்’’ எனத் தெரிவித்திருந்தார். எம்மால் நிறைவேற்ற முடியாதெனத் தெரிந்திருந்தும் வாக்குறுதிகளை வழங்கி, மக்கள் மத்தியில் எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தும் வாக்குறுதி நிறைந்த அரசியல் முறைக்கு நாம் பழக்கப்பட்டு விட்டோம். இதன் இறுதிப் பெறுபேறாக, 1970களிலும், 1980களிலும் நாம் கண்டது போல ஒவ்வொரு 15 அல்லது 20 வருடத்திற்கொரு முறை இந்நாட்டின் இளம் பரம்பரை முற்றாகவே அழிக்கப்படுகிறது. இது பொய்யான, யதார்த்தமற்ற எதிர்பார்ப்புக்களின் உருவாக்கத்தின் விளைவாகும்.

யுத்தத்தின் அர்த்தம் புரியாமல், ஏழை இளைஞர்களும் யுவதிகளும் அதில் ஈடுபட, எவ்வித ஆபத்துக்களையும் எதிர்நோக்காத, இந்நாட்டின் உயர் மட்டத்தினரின் பிள்ளைகள் கொழும்பு, லண்டன், பாரிசில் உள்ள இரவுக் கேளிக்கை விடுதிகளில் தமது வாழ்வை மகிழ்ச்சியாகக் கழிக்கும் அதேவேளை, அநேகமாக தமது வாழ்வின் இருப்புக்காக சம்பாதிக்கச் சென்ற ஏழை மனிதனின் பிள்ளை யுத்த முனையில் மடியும் வஞ்சனைகளைப் பற்றிப் பேசவா? அல்லது அரசியல் கோடுகளாலும் இனக் கோடுகளாலும் மனிதனால் சிந்திக்கக்கூடிய அனைத்து வகையான வேற்றுமைக் கோடுகளினாலும் பிரிக்கப்பட்டுள்ள சமுகத்தைப் பற்றி நான் பேசவா? இங்கு நான் கழித்த சில நாட்களில் நான் கண்டவற்றின்படி பிரிக்கக்கூடிய பிளவுபட்ட தன்மையான எமது சமூகத்திற்கு இச்சபையே ஒரு உதாரணமாகும். அல்லது எம்மால் ஏற்றுக்கொள்வதற்கான தன்மையும் தைரியமும் இல்லாத, நாம் எதிர்நோக்கும் மாபெரும் சவாலான சமாதானத்தைப் பற்றி இந்த மக்களிடம் நான் பேசவா?

அல்லது பொருளாதார அபிவிருத்திக்கோ சமாதானப் பேச்சுவார்த்தைக்கோ எதுவித குறுக்கு வழியும் இல்லை என்ற, அர்ப்பணிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற, உறுதியான சமூக ஒற்றுமைக்கும் அரசியல் கருத்தொருமைப்பாட்டிற்கும் நாம் அத்திவாரத்தை இட வேண்டுமானால், இந்நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால், நீண்டகால நன்மைகளை அடைய குறுகியகால அர்ப்பணிப்புக்களைச் செய்ய வேண்டும் என்ற உண்மையை நான் அவர்களுக்கு கூறி விடவா? அல்லது இலங்கைப் பிரஜைகளான நாம் எதில் வல்லவர்களோ அதைச் செய்யவா? அதாவது குற்றங்களைச் சுமத்தவா? நடந்த தவறுகளுக்காக நான் ஐக்கிய தேசியக் கட்சியை குறை கூறினால் எதிர்த்தரப்பிலுள்ள கனவான்களும் சீமாட்டிகளும் அதிக மகிழ்ச்சியடைவார்கள் என்பது எனக்குத் தெரியும். பொதுஜன ஐக்கிய முன்னணியைக் குறைகூறினால் இப்பக்கத்திலுள்ள எனது சகாக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். அவ்வாறே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., ஏன் விடுதலைப் புலிகளைக்கூட நான் குற்றம் சுமத்தலாம். நான் யாரையும் தவறவிட்டு இருந்தால் என்னை மன்னியுங்கள். அல்லது எமது தலைவர்கள் இன்று

செய்வது போன்று எமது முன்னாள் குடியேற்ற நாட்டு ஆட்சியாளர்களை நான் குறைகூறவா? ஆனால் உண்மை கண்கூடானது. யாரைக் குற்றம் சுமத்தலாம் என்பது மிகத் தெளிவானது. நாம் ஒவ்வொருவரும் கண்ணாடி முன் நின்று எமது விம்பத்தைப் பார்த்தால், எமது கண்களை ஆழமாகவும் நேர்மையாகவும் நோக்கினால் எம்மால் அந்த உண்மையை உணர்ந்துகொள்ள முடியும்.

நாம் யார் என்பதோ கண்ணாடியில் எமது பிரதிபலிப்பு எவ்வாறு என்பதோ அல்ல எமது விவாதம். நாம் யாராக இருந்திருக்கலாம் அல்லது யாராக இருக்கலாம் என்பதே விவாதத்திற்குரியது. அதன் அடிப்படையில், திரு.ரணில் விக்கிரமசிங்க, ஒக்டோபர் தேர்தலின் பின்னர் இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் சமாதானத்தைக் கொண்டு வருவதற்குமான ஒரு அத்திவாரத்தை இடுவதற்குத் தேவையான சமூக மற்றும் தேசிய கருத்தொருமைப்பாடு, சமூக ஒருமைப்பாடு என்பவற்றை கட்டியெழுப்புவதற்கான சில பிரேரணைகளை முன்வைத்தார். அவர் அரசிற்கு இரு ஆவணங்களைக் கையளித்ததுடன் அவற்றை முறையாக ஜனாதிபதியிடமும் சமர்ப்பித்தார். இதில் ஒன்றின் தலைப்பு ‘‘புதிய அரசியல் கலாசாரம் ஒன்றுக்கான ஒரு பொதுவான நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஐக்கிய தேசிய கட்சியால் முன்வைக்கப்பட்டதோர் பிரேரணை’’. இரண்டாவதன் தலைப்பு ‘‘எமது தேசத்தின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு அணுகுமுறை’’ இந்த இரு ஆவணங்களும் கருத்தொருமைப்பாட்டைக் கோரி நிற்பதுடன் அரசியல்வாதிகளான நாம், தவறுகளை செய்துள்ளோம் என்பதை உண்மையாக கூறும் தைரியத்தையும் கொண்டிருந்தன. இந்த இரண்டு பிரேரணைகளும் ஒரு புதிய சமூக ஒழுங்கிற்கு அத்திவாரத்தை இட்டிருக்கும். ஆனால் துரதிஷ்டமாக இன்று வரை இந்தப் பிரேரணைகளை அரசு புறக்கணிக்க எத்தனித்ததுடன் அவற்றிற்கு மாசு கற்பிக்கவும் முனைந்தது.

இன்று நாம் ஒரு தீர்மானத்தை எடுக்கும் நிலையிலுள்ளோம். அதாவது, 21ம் நூற்றாண்டில் தெற்காசியாவின் கொங்கொங் ஆவதா அல்லது தெற்காசியாவின் பல்கன் அல்லது யுகோஸ்லாவியா ஆவதா என்பதே அந்நிலையாகும். தற்போதைய நிலையில் நாம் பின்னால் குறிப்பிட்ட இடத்தை நோக்கியே சென்றுகொண்டிருப்பதாகவே நான் நம்புகிறேன். இது தொடர்பான எமது வெற்றியை அல்லது தோல்வியை இச்சபையோ அல்லது இன்றைய மக்களோ தீர்மானிக்கப் போவதில்லை. எமது வெற்றியை அல்லது தோல்வியை வரலாறே நிர்ணயிக்கப்போகிறது. அதன் ஜூரிகளாக எமது பேரப்பிள்ளைகளும் பூட்டப் பிள்ளைகளுமே திகழப்போகிறார்கள். ஆதலினால் எமது ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுந்திருக்குமாறும், கண்ணாடியில் எம்மையே பார்த்துக் கொள்ளுமாறும் கண்களை ஆழ உற்றுநோக்குவதுடன் எமது ஆத்மாவை ஆழ ஊடுருவிப் பார்த்து எழுந்திருக்குமாறும் உங்களை நான் வற்புறுத்திக் கேட்கிறேன். முடிவாக எனக்கு மிகவும் பிடித்த கவிஞரான இரவீந்திரநாத் தாகூரின் கவிதை வரிகளில் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஓ! நண்பர்களே! எழுந்திருங்கள். இனியும் தூக்கமேன்!
இரவு முடிந்ததுடன் தொலைந்துபோய்விட்டது.
உங்கள் பகலையும் தொலைக்கப் போகிறீர்களா?
எண்ணிலடங்கா வருடங்களாக தூங்கி விட்டீர்கள்,
இந்தக் காலையிலாவது எழும்பமாட்டீர்களா?